**சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (“நிறுவகம்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SLPSAS 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒத்த தன்மை அல்லது செயற்பாடு உள்ள சொத்துக்களை தொகுக்காமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 10,821,672 தொகையான ஏனைய சொத்துக்களின் கிரயம் காட்டப்பட்டுள்ளது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைத் தவிர ஏனைய சொத்துக்களின் கிரயம் தனியான குழுவின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,911,548 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பத்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்காது அவை மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பிழையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களில் பிரதிபலிக்கப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட ரூபா 23,744,540 தொகையான மூலதன மானியம் மற்றும் நன்கொடை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துரித உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (AHEAD) செயற்திட்டம் மற்றும் குழந்தைகளுக்கான அவசர நிவாரணம் மற்றும் சர்வதேசம், இலங்கை (CERI) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,401,660 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது கணக்குப் புத்தகங்களில் சீர்செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | கணக்கிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,817,918 நுகரக்கூடிய சரக்கிருப்பு மீதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரக்கிருப்பாக பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக செலவினங்களாக பதிவழிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் உள்ளவாறான சரக்கிருப்பு மற்றும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை என்பன முறையே அந்தத் தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | தவறாக இது காட்டப்பட்டது. இது கணக்குப் புத்தகங்களில் சீர்செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | கணக்கு புத்தகங்களில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள் தொடர்பான அனைத்து சிக்கல்களும் இத் தலைப்பின் கீழ் காட்டப்படலாம்.

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்களின் கிரயம் | 6,667,608 | 10,188,368 | 3,520,760 | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அணுகல் பதிவேட்டில் உள்ள வேறுபாடு அறிக்கையிடப்படாத புத்தகப் பரிமாற்றங்கள், HETC செயற்திட்டத்திலிருந்தான | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | சேகரிப்புக்கள் மற்றும் நன்கொடை புத்தகங்கள் ஆகியவற்றின் காரணமாகும், இது நிதிக்கூற்றுக்கள் 2023 இல் சீர்செய்யப்படும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,128,637 தொகை 09 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | UGC ஏற்கனவே ரூபா 2,128,637 பெறவேண்டிய பிணைமுறியை பதிவழிப்பதற்கு பரிந்துரைத்துள்ளதுடன் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. | பெறவேண்டிய பிணைமுறிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக உள்ள ரூபா 345,685 தொகையான கடன் 2022 திசெம்பர் 31 இற்குள் அறவிடப்படாமல் 9 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளது. | நீண்டகாலமாக நிலுவையாக உள்ள ஏனைய அனைத்து பெறவேண்டியவைகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உபபிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதங்கள் | கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 67,494,934 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | ஏனைய UGC நிறுவனங்களைப் போலல்லாமல் கல்விசார் பதவியணியினர் விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதில்லை. | சுற்றறிக்கைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அதன் அறிக்கையானது 2022 | 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு கிட்டத்தட்ட பூர்த்தி | சுற்றறிக்கைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதம் மூலம் திருத்தப்பட்டவாறு XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை 2023 யூன் 20 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதியினுள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 7,762,169 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 833,091 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,595,260 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 10,471,005 ஆல் குறைவடைந்திருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 8,051,245 ஆல் அதிகரித்தமை என்பன பிரதானமாக மேற்குறிப்பிட்ட வீழ்ச்சிக்கு பங்களித்த காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சியம் 2022 ஆம் ஆண்டில் பராமரிப்புப் பிரிவுக்கு ரூபா 3,249,393 பெறுமதியான நுகரக்கூடிய பொருட்களை வழங்கியிருந்தன. எனினும், வேலை அட்டைகள் இல்லாமல் குறிப்பிடத்தக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டன, மேலும் தற்போதுள்ள வேலை அட்டைகள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில், பயனர் துறைகள் அல்லது நிறுவனப் பிரிவுகளால் கோரப்பட்ட 28 வேலை அட்டைகள் அவற்றை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு சரியான மேற்பார்வை இல்லாததால் அறிக்கைத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு பிரிவில் பதவியணியினர் அனுபவம் இல்லாததால் முறையான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை . இந்த ஆண்டில் இது புதுப்பிக்கப்பட்டு சீர்செய்யப்படும். | உரிய காலத்தில் பராமரிப்பு மற்றும் முறையான ஆவணங்களை மேற்பார்வையுடன் பூர்த்தி செய்வதற்காக விரிவான வேலை அட்டை முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி நாட்டுப்புறவியல் மற்றும் கலாச்சாரத்தில் கல்வித் தகைமைகளைக் கொண்ட விரிவுரையாளர் ஒருவர் 2018 செப்தெம்பரில் ஆட்சேர்ப்பு | குறிப்பிட்ட நபர் நாட்டுப்புறவியல் மற்றும் கலாச்சார கற்கைகளில் விரிவுரையாளராக (தகுதிகாண்) நியமிக்கப்பட்ட போது, நிறுவனம் தனது | தேவையான அங்கீகாரத்தை பெற்று, பணிச்சுமையை ஒதுக்கி, பாடத்தின் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தார். குறித்த விரிவுரையாளருக்கு 2018 திசெம்பர் 21 முதல் 2022 மே வரை அவரது தகைமைகளிற்கு ஏற்ற பாடத்திட்டங்களில் அவரை ஈடுபடுத்தாமல் ரூபா 8.934,203 கூட்டுமொத்தமான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அவருக்கு இவ்வாறு சம்பளம் செலுத்தப்பட்டு வந்த போதிலும் நாட்டுப்புறவியல் மற்றும் கலாச்சாரத் துறை தொடர்பான PhD ஐ கற்பதற்காக ரூபா 7,893,081 பிணைமுறிக்கு உட்பட்டு 2022 மே முதல் 2025 யூலை வரை சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | விசேட பாடப் பகுதி தொடர்பான புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு மூலோபாயத் திட்டத்தை கொண்டிருந்தது. மேலும், ஏனைய துறைகளில் மேலதிக பாடங்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டு EUSL இன் கலை மற்றும் கலாச்சார பீடத்தில் அவரது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. | சரியான ஒதுக்கீட்டை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஐந்து இலக்குகளின் கீழ் 66 செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இவற்றில் 14 நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணிசமான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில், அதாவது 30 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | விலையேற்றம், அரசாங்கக் கொள்கை, பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் மீளாய்வுக் காலப்பகுதியின் போது செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. | கால எல்லையினுள் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் 2030 பற்றி நிறுவகம் அறிந்திருந்த போதிலும் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |